முருகப்பெருமான் துணை

**மகான் மதுரகவி ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.09.2023**, சனிக்கிழமை

1. அருந்தவராஜனே அரங்கனே
அண்ணலே ஞான தேசிகனே
வருந்தும் மக்கள் வாழ்வில்
வசந்தநிலை காட்டி மீட்க வந்த
2. வந்தநல் கலியுக ஞானியே
வள்ளலே உன் பெருமை கூறி
சிந்தைபட அறிவுரை ஆசியை
செப்பிடுவேன் சோபகிருது யாளிதிங்கள்
3. திங்களிலே முப்பான்திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 30ம் நாள், 16.09.2023, சனிக்கிழமை)
தெரிவிப்பேன் மதுரகவி ஆழ்வாரும்
இங்கனமே உலகம் பாதுகாப்புற
இணையிலா தருமவழி காட்டுகின்ற
4. காட்டுகின்ற அரங்கன் வழிகாட்டலை
கட்டளையாக மக்கள் ஏற்று
வாட்டமற தரும சேவை தனை
வழிமொழிந்து உலகினில் செய்துவர
5. வருகவே வையகம் தானும்
வள்ளல் தன்மை நிறைந்த
தருமவான்கள் படைகளாகவே
தாமுரைப்பேன் உருவாகி இனிதே
6. இனிதே உலக மாற்றம் காணும்
எல்லா மக்களும் குருவருளை
கனிவேலவன் அனுகூலமாக ஏற்று
கட்டாயம் தொடர்ந்து வருக

7. வருகவே மனபலம் தேகபலமுடன்
வருங்காலம் உணரும் ஞானமும்
தரும குணமும் தலைமை தாய்மை பண்பும்
தக்கபடிநிலை யாவும் தேறியே
8. தேறியே தேசிகனார் கரங்கள் பட
தீட்சை பலமும் தானடைய
அறிவுத் தெளிவு ஆன்மபலம்
அனைத்தும் கூடி ஞானிகளாக
9. ஆகவே மாற்றம் கண்டுமே
அறிவிப்பேன் சர்வ பலமோடு
செகமெங்கும் சுத்த சன்மார்க்க
சிறப்பான வழிமுறைகள் பரவ
10. பரவவே மக்களெல்லாம் பரிவு
பக்குவம் நிறைந்த வண்ணம்
துறவிபோல சேவையில் சிறந்து
தேசம் வளர்ச்சி மேம்பட
11. மேம்பட உண்மைபட சேவை
மேலவர் மெச்சும் சேவையாக
நம்பகமுறச் செய்து நன்கு
ஞான ஆட்சியும் படைப்பர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—